# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. C. ராஜசேகர், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

2025–ம் ஆண்டு ஜுன் மாதம் 17–ம் நாள் செவ்வாய் கிழமை

**I.A.No.7/2025 in O.S.No.174/2019**

1. M.அருளானந்தம் :: மனுதாரர் / வாதி

**/எதிர்/**

1. அவிலாராணி
2. சேவியர்
3. குழந்தை தெரசு
4. ஜோதி
5. சவரியார்
6. செயல் அலுவலர்,
   அனுமந்தன்பட்டி பேரூராட்சி.
7. இளமின் பொறியாளர்,
   உத்தமபாளையம்.
8. வட்டாட்சியர், உத்தமபாளையம்
9. சார்பதிவாளர், உத்தமபாளையம்.

:: எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

-------

இம்மனுவானது 13.06.2025–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 மற்றும் 5 முதல் 9 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளதால், இம்மனுவில் 1, 2 மற்றும் 5 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு சார்பு செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.06 17:10:17 +0300

## உத்தரவு

மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கினை திரும்ப பெற்றுக்கொண்டு அசல் வழக்கின் வழக்குமூலத்துடன் புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதித்து உத்தரவிடவேண்டி உ.வி.மு.ச. கட்டளை 23 விதி 1(3)–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் / வாதி தரப்பு மனு உரையின் சுருக்கம்:**

அசல் வழக்கில் விளம்புகை மற்றும் உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்திருப்பதாகவும், மனுதாரரின் வயது முதிர்வு காரணமாக ஏற்பட்ட மறதியால் மரிய அருள்பாக்கியம் மனுதாரரின் சகோதரிக்கு 1981–ம் ஆண்டு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் குறித்தும், மேரியம்மாள் வளனுக்கு 1995–ம் ஆண்டு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணம் குறித்தும், மேற்படி ஆவணங்கள் தொடர்பான உத்தரவு குறித்தும் மனுதாரரின் சகோதரர் பால்ராஜ் மனுதாரருக்கு பாக பாத்திய ஆவணங்கள் ஏற்படுத்திக்கொடுத்த விபரங்களையும் குறிப்பிட்டுக் கூறாமல் விடுபட்டுபோய் இருப்பதாகவும், மேற்படி சங்கதிகளை பொறுத்து வழக்குரைரைய திருத்தம் செய்வது நீதிமன்றத்தில் தேவையற்ற கால தாமதம் ஏற்படுத்தும் என்பதால் அசல் வழக்கினை வாபஸ் பெற்றுக் கொண்டு இதே வழக்கு மூலத்துடன் புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதிக்கும்படி வேண்டப்பட்டுள்ளது.

3) **3, 4 எதிர்மனுதாரர்கள் / 3, 4 பிரதிவாதிகள் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்**

மனுதாரர் தரப்பு மனுவுரைச் சங்கதிகளை தவறானவை என மறுத்தும், அசல் வழக்கானது தற்போது சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு இரு தரப்பு வாதத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், இம்மனுவினை தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல என்றும், மனுதாரருக்கு இம்மனுவில் கண்ட ஆவணங்கள் பற்றி எந்த தேதியில் தெரியவந்தது என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை என்றும், இம்மனுவில் தெரிவித்துள்ள 1981, 1995–ம் தேதியிட்ட ஆவணங்கள் குறித்து மனுதாரருக்கு முன்பே தெரியும் என்றும், இருந்தபோதிலும், மேற்படி ஆவணங்கள் குறித்து தனக்கு தற்போது தான் தெரியவந்தது என குறிப்பிட்டு வழக்குரையை

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.06 17:10:26 +0300

திரும்ப பெற்றுக்கொண்டு புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதிக்குமாறு வேண்டியிருப்பது ஏற்புடையதல்ல என்றும், உண்மையிலேயே மனுதாரர் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டும் என விரும்பும் பட்சத்தில் சாட்சி விசாரணைக்கு முன்பே மேற்படி நடவடிக்கையை எடுத்திருப்பார் என்றும், ஆனால், மனுதார் தற்போது எதிர்மனுதாரர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்த வேண்டும் என்ற காரணத்தினாலேயே இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதன்படி இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறு வேண்டடப்பட்டுள்ளது.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**5)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**6)** **<u>பிரச்னைக்கான விவாதம் மற்றும் தீர்வு:</u>**

06–01) மனுதாரர் தரப்பு மனுவுரையில், மனுதாரரின் வயது முதிர்வு மற்றும் அதனால் ஏற்பட்ட மறதி காரணமாக மரிய அருள்பாக்கியம் என்பவர் மனுதாரர் சகோதரிக்கு 1981–ம் ஆண்டு ஏற்படுத்திய கிரைய ஆவணம் மற்றும் மேரியம்மாள் வளனுக்கு 1995–ம் ஆண்டில் ஏற்படுத்திய கிரைய ஆவணம் மற்றும் மனுதாரரின் சகோதரர் பால்ராஜ் மனுதாரருக்கு ஏற்படுத்திக்கொடுத்த பாக பாத்திய ஆவணம் குறித்து வழக்குரையில் தெரிவிக்காமல் இருந்துவிட்டதாகவும், மேற்படி ஆவணங்களைப் பொறுத்து வழக்குரையை திருத்தம் செய்யக்கோருவது தேவையற்ற கால விரயத்தை ஏற்படுத்தும் என்பதால் அசல் வழக்கினை திரும்ப பெற்றுக்கொண்டு அதே வழக்கு மூலத்துடன் புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

06–02) இதனைப்பொறுத்து 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு முக்கிய எதிரவாதம் யாதெனில், மனுதாரருக்கு முன்பே மேற்படி ஆவணங்களைப் பொறுத்து நன்கு தெரியும் என்றும், இருந்தபோதிலும், அசல் வழக்கில் இரு தரப்பு சாட்சி விசாரணை முடிந்து இரு தரப்பு வாதத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், இம்மனுவினை

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.06 17:10:34 +0300

தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல என்றும், மேற்படி ஆவணங்கள் குறித்து பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.12 ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேலும், வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டும் என்று மனுதாரர் விரும்பும் பட்சத்தில் அதனை சாட்சி விசாரணை துவங்குவதற்கு முன்பே செய்திருக்கவேண்டும் என்றும், அதனடிப்படையில் இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறு வேண்டடப்பட்டுள்ளது.

06–03) அசல் வழக்குரையை திரும்ப பெற்றுக்கொண்டு அதே வழக்கு மூலத்துடன் புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதி அளிக்குமாறு வேண்டடப்பட்டுள்ள இம்மனு குறித்த சட்ட வகைமுறை குறித்து பரிசீலிக்கையில், உ.வி.மு.ச. கட்டளை 23 விதி 1(3)–ன் படி ஏதேனும் ஒரு வழக்கானது ஏதேனும் குறைபாட்டால் பாதிக்கப்படும் பட்சத்திலும் அல்லது சரியான காரணம் கூறி நீதிமன்றத்தை திருப்தியுறச் செய்யும் பட்சத்திலும் வழக்குரையை திரும்ப பெற்றுக்கொண்டு புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதிக்கலாம் என விளக்கப்பட்டுள்ளது.

06–04) இந்நிலையில், இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள காரணம் அசல் வழக்கினை திரும்ப பெற்றுக்கொள்வதற்கு போதுமான காரணங்களை கொண்டுள்ளதா ? என பரிசீலிக்கையில், மனுதாரர் இம்மனுவில் 1981–ம் ஆண்டிற்கான கிரைய ஆவணம் மற்றும் 1995–ம் ஆண்டிற்கான கிரைய ஆவணம் மற்றும் மனுதாரரின் சகோதரர் மனுதாரர் பெயரில் ஏற்படுத்திக்கொடுத்த பாக பாத்திய ஆவணம் ஆகியவற்றை வழக்குரையில் தெரிவிக்காமல் வயது முதிர்வு காரணமாக மறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

06–05) ஆனால், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்உரையின்படி, பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.12 ஆகிய ஆவணங்களை பரிசீலிக்கையில், வருவாய் துறையினர் முன்பான நடைமுறைகளில் கடந்த 2018–ம் வருடம் செப்டம்பர் மாதத்திலும் மற்றும் 2019–ம் வருடம் மார்ச் மாதத்திலும் தீர்மானங்கள் எட்டப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. மேற்படி ஆவணங்களிலும் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 1995–ம் வருடத்திய ஆவணம் மற்றும் 1981–ம் வருடத்திய ஆவணம் மற்றும் மனுதாரர்

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.06 17:10:40 +0300

பெயரில் ஏற்பட்டதாக சொல்லப்படும் பாகப்பிரிவினை ஆவணங்கள் பற்றி குறிப்பிட்டு மேற்படி நடைமுறைகளில் மனுதாரர் தனது தரப்பு வாதத்தை முன்னிறுத்தி வழக்காடியிருப்பதை தெளிவாக அறிய முடிகிறது.

06–06) எனவே, மேற்படி ஆவணங்களைப் பொறுத்து மனுதாரர் / வாதிக்கு இந்த நிர் அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.12 ஆவணங்களின்படி நன்கு தெரிந்திருப்பதை இந்நீதிமன்றத்தால் தெளிவாக அறிய முடிகிறது. அதேவேளையில், மேற்படி ஆவணங்களைப் பொறுத்து தனக்கு எப்போது ஞாபகம் வந்தது என்ற விபரம் மனுதாரரால் இம்மனுவில் தெரிவிக்கப்படவேயில்லை. மேலும், 3, 4 பிரதிவாதிகளால் 20.01.2020 தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் 8–வது பத்தியிலும் இம்மனுவில் மனுதாரர் மறந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ள சங்கதிகளை தெரிவித்திருப்பதை தெளிவாக அறியமுடிகிறது.

06–07) எனவே, அசல் வழக்கானது 04.09.2019 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் இம்மனுவில் தான் வழக்குரையில் குறிப்பிட்ட மறந்துவிட்டதாக தெரிவித்துள்ள சங்கதிகளைப் பொறுத்து கடந்த 20.01.2020–ம் தேதியிலேயே 3, 4 பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் தெளிவாக எதிர்வாதமாக முன்னெடுத்துள்ள நிலையில், மனுதாரர் தனக்கு தற்போதுதான் மேற்படி சங்கதிகள் குறித்து நினைவுக்கு வந்ததாக தெரிவித்திருப்பது முற்றிலும் ஏற்புடையதாக தோன்றவில்லை.

06–08) அதன்படி பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.12 ஆகிய நடைமுறைகளில் மனுதாரர் தரப்பினராக இருந்து இதே மனுவின் பொருண்மைகள் குறித்து விவாதித்து தீர்மானம் எட்டியுள்ள நிலையில், மனுதாரருக்கு இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மேற்படி பொருண்மைகள் குறித்து நன்கு தெரியும் என்பதையும், அதேபோல அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு 3 மாதம் கழித்து 3, 4 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையிலும் வழக்குரையில் தெரிவிக்கப்படாமல் விடுபட்டு போனதாக குறிப்பிட்ட சங்கதிகள் குறித்து எதிர்வாதம்

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.06 17:10:47 +0300

முன்னெடுத்துள்ள நிலையில், மனுதாரர் தனது வழக்குரையை திருத்தம் செய்வதற்கு 2020-ம் ஆண்டிலேயே 3, 4 பிரதிவாதிகளால் நினைவூட்டப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. ஆனால், அப்போதெல்லாம் மேற்படி பொருண்மைகள் குறித்து வழக்குரையை திருத்தம் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அசல் வழக்கினை நடத்தி வந்து இரு தரப்பிலும் முழுமையாக சாட்சி விசாரணை முடிவுற்று, தற்போது இரு தரப்பு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், தனக்கு வயது முதிர்வு காரணமாக மறதி ஏற்பட்டுவிட்டது என தெரிவித்து வழக்குரையை திரும்ப பெற அனுமதிக்கும்படி வேண்டப்பட்டுள்ள இம்மனுவின் கோரிக்கை முற்றிலும் ஏற்புடையதாக தோன்றவில்லை.

06-09) எனவே, மனுதாரர் / வாதிக்கு இம்மனுவில் வயோதிகம் காரணமாக மறதி ஏற்பட்டுவிட்டது என தெரிவித்துள்ள சங்கதிகள் குறித்து 5 ஆண்டுகளுக்கு முன்பே 3, 4 பிரதிவாதிகளால் எதிர் வழக்குரையின் வாயிலாக நினைவூட்டப்பட்டுவிட்ட நிலையில், மேற்படி காரணத்தின் அடிப்படையில் வழக்குரையை திரும்ப பெற அனுமதிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதன்படி வழக்குரையை திரும்ப பெறுவதற்காக மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள காரணம் இந்நீதிமன்றத்திற்கு திருப்பதியுள்ளதாக தோன்றவில்லை என்பதால் இம்மனுவானது நிலைக்கத்தக்கதல் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

06-10) மேலும், 7 ஆண்டுகள் பழமையான இவ்வழக்கில் இரு தரப்பிலும் முழுமையான சாட்சி விசாரணை முடிவுற்ற நிலையில், இம்மனுவில் வேண்டியிருக்கும் பரிகாரமானது முற்றிலும் ஏற்புடைய ஒன்றாக தோன்றவில்லை. எனவே, மேற்கண்ட வாதத்தின்படி மனுதாரர் தனக்கு நன்கு தெரிந்திருந்தும், அதேபோல 5 ஆண்டுகளுக்கு முன்பே எதிர்வழக்குரையில் எதிர்வாதம் முன்னெடுத்து பிரதிவாதிகளால் நினைவூட்டப்பட்டுள்ள நிலையிலும், தற்போது தனக்கு தெரியவில்லை என வாதம் முன்னெடுத்து அசல் வழக்குரையை திரும்ப பெற அனுமதிக்குமாறு வேண்டப்பட்டுள்ள இம்மனுவானது ஏற்புடையதல்ல என முடிவு செய்து இம்மனுவினை தள்ளுபடி செய்திட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

RAJASEKAR C

Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.06 17:10:54 +0300

**7)** முடிவாக,

| | |
|---|---|
| 1. | அசல் வழக்குரையை திரும்ப பெறக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 17.06.2025–ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.06 17:11:02 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

**<u>இரு தரப்பிலும் சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை</u>.**

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.06 17:11:09 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

-

I.A.7/2025
in
O.S. 174/2019
FAIR / DRAFT ORDER
Date : 17.06.2025

## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. C. ராஜசேகர், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

2025–ம் ஆண்டு ஜுன் மாதம் 17–ம் நாள் செவ்வாய் கிழமை

**I.A.No.7/2025 in O.S.No.174/2019**

| | |
|---|---|
| 1. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், 1–வது வார்டு, கதவு எண்.1–2–29A 2 என்ற முகவரியில் வசித்து வரும் லேட்.அருள்வாக்கியமும் பிள்ளை அவர்களின் குமாரர் கிறிஸ்துவ வயது சுமார் 80 உள்ள அருளானந்தம். |

.... மனுதாரர் / வாதி

| | |
|---|---|
| 1 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், வார்டு–1, கருப்பையா கோனார் தெரு, கதவு எண்.1–1–48 என்ற முகவரியில் வசித்து வரும் சேவியர் அவர்கள் மனைவி கிறிஸ்தவர் வயது சுமார் 48 உள்ள அவிலாராணி. |
| 2 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், வார்டு–1, கருப்பையா கோனார் தெரு, கதவு எண்.1–1–8D2 என்ற முகவரியில் வசித்து வரும் ஜேம்ஸ் அவர்கள் மகன் கிறிஸ்தவர் வயது சுமார் 54 உள்ள சேவியர். |
| 3 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், வார்டு–2, கிறிஸ்தவர் வேளாளர் தெரு, கதவு எண் 2–1–14 என்ற முகவரியில் வசித்து வரும் சகாயம் அவர்கள் மனைவி கிறிஸ்தவர் வயது சுமார் 50 உள்ள குழந்தை தெரசு. |
| 4 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், வார்டு–1, கருப்பையா கோனார் தெரு, கதவு எண். 1–1–48 என்ற முகவரியில் வசித்து வரும் சேவியர் அவர்கள் மனைவி கிறிஸ்தவர் வயது சுமார் 37 உள்ள ஜோதி. |
| 5 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், வார்டு–2 கிறிஸ்தவர் வேளாளர் தெரு, கதவு எண்.2–1–15 என்ற முகவரியில் வசித்து வரும் மரியராஜ்பிள்ளை அவர்கள் மகன் கிறிஸ்தவர் வயது சுமார் 70 உள்ள சவரியார். |
| 6 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், அனுமந்தன்பட்டி பேரூராட்சி அதன் செயல் அலுவலர் அவர்கள் மூலம் |
| 7 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் டவுன், உத்தமபாளையம் தமிழ்நாடு மின்சாரவாரியம் அதன் இள மின் பொறியாளர் மூலம். |

RAJASEKAR C Digitally signed by RAJASEKAR C Date: 2025.06.06 17:11:19 +0300

| | |
|---|---|
| 8 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் டவுன், உத்தமபாளையம் வட்டாட்சியர் அவர்கள் மூலம் |
| 9 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் டவுன், உத்தமபாளையம் சார்பதிவாளர் அவர்கள் மூலம். |

.... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவவாதிகள்

மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கினை திரும்ப பெற்றுக்கொண்டு அசல் வழக்கின் வழக்குமூலத்துடன் புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதித்து உத்தரவிடவேண்டி உ.வி.மு.ச. கட்டளை 123 விதி 1(3)–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 24.04.2025 |
| நீதிமன்ற கட்டணம் | ரூ.20/– செலுத்தப்பட்டது. |

இம்மனுவானது 13.06.2025–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 மற்றும் 5 முதல் 9 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளதால், இம்மனுவில் 1, 2 மற்றும் 5 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு சார்பு செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**நிறைவேற்றாணை**

| | |
|---|---|
| 1. | அசல் வழக்குரையை திரும்ப பெறக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

**செலவுத் தொகை இல்லை.**

2025–ம் வருடம் ஜூன் மாதம் 17–ம் நாள் எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

RAJASEKAR C

Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.06 17:11:26 +0300

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்.***

| |
|---|
| I.A.7/2025 in O.S. 174/2019 |
| EX ORDER |